முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஞானச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.04.2019, வியாழக்கிழமை

1. **பொறிபுலன் வென்றிட்ட அரங்கா**
**புண்ணியம் வளர்த்திட்ட அரசா**
**வறுமைக் கோட்டு மக்களையும்**
**வாழ வைக்க பசிபிணி விரட்ட வள்ளலாய்**
2. வள்ளலாய் வந்த ஞானியே
வையகத்தில் உன் பெருமை கூறி
வல்லமைபட நித்ய பிரசன்ன ஆசியை
வழங்குவேன் ஞானச்சித்தர் யானும்
3. யானும் **விகாரி தகர் திங்கள்**
**உயர்வான பஞ்சதிகதி குருவாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 5ம் நாள் 18.04.2019, வியாழக்கிழமை)**
ஞான ஆட்சி மலர உரைப்பேன்
ஞாலமெங்கும் ஞானிகள் வழிபாடு பெருகி
4. பெருகியே அன்னதான பலம்
பிசகில்லா புண்ணியமாக மாற
முருகப்பெருமானும் அருளும் தயவும்
முழுமையாக மக்களிடை இறங்கி
5. இறங்கியே கலியுகம் தானும்
இணையில்லா அருள் உலகமாகி
வரங்கள் கூடி ஞானிகள் கூட்டம்
வருகையும் பெருகி கலியுகம் தானும்
6. தன்னிலே ஞானயுகமாகும்
தவசியாக அரங்கன் வந்த
மண்ணுலகில் அவதார நோக்கம்
மறுப்பில்லா நிறைவேறி வெற்றி காணும்
7. காணவே அரங்க மகானின்
கருணையாக சக்தியாக வந்த
ஞானவழி தொண்டர்கள் அனைவரும்
ஞானிகளாகவே ஆக்கம் அடைவர்
8. அடையவே தொண்டர்களை கொண்டு
அரங்கமகானின் அற்புத சேவை
தடையிலா வளரும் உயரும்
தன்னார்வ தொண்டர்களாகவே
9. ஆகவே உலக மக்களெல்லாம் தேறி
அநீதி எதிர்மறை நிலைகளை விரட்டி
வகைபட சமூக சமுதாயத்தில்
வளர்ச்சிக்குரியவர்களாகி சிறப்பர்

10. சிறப்புதரும் சக்தியாக மக்களை
சேவை கொண்டு மாற்றும் அரங்கமகானை
மறுப்பின்றி குருவாய் ஏற்றுவிட
மக்களுக்கு மரணமென்பதே இல்லை

11. இல்லையப்பா கலியின் தொல்லை
இல்லாமை எனும் வறுமை பற்றா
வல்லமையும் வளமும் கூடி சிறப்பர்
வழுத்திய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஞானச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

பொறிபுலன்களை வென்று பற்றறுத்த அரங்கமகா தேசிகனே எல்லையில்லாது புண்ணியம் வளர்த்திட்ட ஞான அரசனே வறுமையில் வாடுகின்ற மக்களின் பசிப்பிணியை போக்கிட வள்ளல் ஞானியாய் வந்துதித்த ஆறுமுக அவதாரமே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி உலகினில் ஞானஆட்சி மலர்ந்திடவே விகாரி வருடம் சித்திரை மாதம் 5ம் நாள் 18.04.2019, வியாழக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே ஞானச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஞானச்சித்தர்.

உலகமெங்கும் முற்றுப்பெற்ற ஞானிகள் திருவடி பற்றி செய்கின்ற ஞானபூஜைகளை தொடர்ந்து வழிபட்டு உலக மக்களும் ஞானிகளை வணங்குவதுடன் தவறாமல் அன்னதானமும் செய்து வர, செய்திட்ட அன்னதான பலமானது சற்றும் மாற்றம் இல்லாத வகையிலே புண்ணியமாக மாறிடும். உலகினில் புண்ணியம் பெருகிட முருகப்பெருமானும் அருள் தயவு உணர்வும் மக்களுக்குள் இறங்கி அருள் செய்திட மாயை சூழ் கலியுகமும் இணையில்லாத அருள் உலகமாக மாறிடும்.

முழுமையாக மக்களிடையே அன்பும் தயவும் அருளும் இறங்கி கலியுகமும் இணையில்லாத அருள் உலகமாக மாறி அரங்கனின் தலைமையிலே ஞானிகளின் கூட்டத்தின் வருகையும் இவ்வுலகினில் பெருகி கலியுகம் ஞானயுகமாக மாறிடும்.

மகா தவசியாக வந்துதித்திட்ட அரங்கமகா தேசிகனாரின் அவதார நோக்கமும் நிறைவேறி வெற்றி காணும். ஆறுமுகப்பெருமானின் அவதாரம் அரங்கமகா தேசிகனாரின் கருணையாலே அரங்கனின் சக்தியாக வந்திட்ட ஞானவழி தொண்டர்கள் அனைவரும் ஞானிகளாகும் தகுதி பெற்று அரங்கன் கருணையாலே ஞானிகளாகவும் ஆகிடுவார்கள். உத்தம ஞான தொண்டர்களின் உதவியுடன் ஞானத் தொண்டர்களைக் கொண்டு இவ்வுலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அற்புதமான சேவைகள் எல்லாம் இனி தடையின்றி வளரும் உயரும்.

தன்னார்வ தொண்டர்களாகவே உலக மக்களெல்லாம் சுயநலம் விடுத்து பொதுநலமாய் நடந்து அரங்கனின் தொண்டுகளைச் செய்து உலக மக்களெல்லாம் தேறிடுவார்கள். உலகினில் உள்ள சமூக சமுதாயத்தில் வளர்ச்சி பெற்றவர்களாகி சிறப்படைவார்கள்.

சிறப்புமிக்க சக்தி வடிவமாக அவதரித்து மக்களை தொண்டின் மூலம் மாற்றுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை மறுப்பேதும் இன்றி குலகுருவாக ஏற்று அரங்கன் கொள்கைகளை தவறாது கடைப்பிடித்து வர, அவர்களுக்கு மரணம் என்பதே இல்லையப்பா.

**இனி உலகினில் இல்லையப்பா கலியின் தொல்லை. இல்லாமை எனும் வறுமையும் மக்களை பற்றாமல் மக்கள் எல்லாம் தேறி வல்லமையும் வளமும் பெற்று சிறப்படைவார்கள்** எனக் கூறுகிறார் மகான் ஜெயமுனிவர்.

–சுபம்–